**6 குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சங்ககிரி**
**சேலம் மாவட்டம்.**

**முன்னிலை – திரு. D. சிவக்குமார், B.Sc., M.I.B., L.L.B., P.G.D.C.A.,**

2026 –ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10–ம் நாள் திங்கட்கிழமை

ஸ்ரீபராபவ ஆண்டு ஆடி மாதம் 25 –ம் நாள் திங்கட்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் – 274/2025**

**CNR No. TNSA09-001967-2025**

தமிழ்நாடு அரசுக்காக,
(State of Tamil Nadu, Rep. by,)
காவல் உதவி ஆய்வாளர்,
மகுடஞ்சாவடி காவல் நிலையம்,
குற்ற எண். 127/2025 .... குற்றமுறையீட்டாளர்

**/எதிர்/**

திரு. பிரசாந்த் (32/2025),
த/பெ. ரவி,
கிழக்கு புளியம்பட்டி,
இடங்கணசாலை,
சங்ககிரி தாலுக்கா,
சேலம் மாவட்டம். ... எதிரி

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:34:01 +0530

| S. No | Name of the P.S and Cr.No of the Offence | Description of the Accused | | | | | Date of | | | | | | | | Sentence or order | Explanation of Delay |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Name | Father's name | Occupation | Residence | Age | Occurrence | Complaint | Apprehension | Release on bail | Commitment | Commencement of Trail | closure of Trial | Service of Copy Judgment or finding on accused | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 1 | Magudanchavadi P.S Cr.No. 127/2025 | Prasanth | Ravi | Wages | East Puliyampatti, Edanganasalai, Sankari Tk, Salem Dt. | 32/2025 | 12.04.2025 | 13.04.2025 | 13.04.2025 | 21.04.2025 (Bailed by Court) | N.A | 16.02.2026 | 10.08.2026 | Nil | 10.08.2026 | Nil |

| | | |
|---|---|---|
| **I.** | Period of Remand of Accused | 21.04.2025 (Bailed by Court) |
| **II.** | Date of filing of Final Report in Court | 08.10.2025 |
| **III.** | Date of questioning of accused under section 230 B.N.S.S | 29.12.2025 |
| **IV.** | Filing of Miscellaneous petitions and their result | 1. CMP. No.4/2026 - Petition U/s. 359 of B.N.S.S. – dismissed on 22.07.2026.<br>1. CMP. No.5/2026 - Petition U/s.311 of Cr.P.C/348 of B.N.S.S. – allowed on 23.07.2026 |
| **V.** | Date of examination in chief and cross-examination of witnesses | **Witness** / **Chief** / **Cross**<br>PW1 / 22.07.2026 / 22.07.2026<br>PW2 / 23.07.2026 / 23.07.2026 |
| **VI.** | Date of examination of accused under section 351(1)(b) of B.N.S.S | 04.08.2026 |

**CC.No.274/2025**

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:34:07 +0530

| | | |
|---|---|---|
| VII | Details of abscondence of accused and his appearance / production | Nil |
| VIII. | Grant of stay by superior Court and the result thereof | Nil |
| IX. | Final Order | Accused is found not guilty for the offences under Section 351(3), 308(5) of B.N.S. and the accused is **acquitted** under Section **271(1) of B.N.S.S** and he be set at liberty. |

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SANKARI**

**JUDGMENT IN C.C. NO.274 OF 2025 ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SANKARI.**

**PRESENT: Thiru. D. Sivakumar, B.Sc., M.I.B., L.L.B., P.G.D.C.A.,**
**Judicial Magistrate No.II, Sankari**
**(Monday, Dated: 10th day of August 2026)**

| | |
|---|---|
| Complainant | Sub Inspector of Police, Magudanchavadi. |
| Accused | Mr. Prasanth (32/2025) S/o. Ravi. |
| Offences | Under Section 351(3), 308(5) of B.N.S. |
| Finding | Accused is found not guilty for the offences under Section 2351(3), 308(5) of B.N.S. |
| Sentence | In the result, Accused is found not guilty for the offences under Section 351(3), 308(5) of B.N.S. and the accused is **acquitted** under Section **271(1) of B.N.S.S** and he be set at liberty. |

இவ்வழக்கானது கடந்த 08.10.2025–ஆம் தேதி இந்நீதின்றத்தில் CC.No. 274/2025–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 10.08.2026–ஆம் தேதி விசாரணைக்கு வந்த போது, அரசுதரப்பில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. S. கதிர்வேல்** அவர்கள்



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:34:12 +0530

முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இந்த வழக்கில் இன்று வழங்குகின்ற

**தீ ர் ப் பு ரை**

**1.** இவ்வழக்கில் வாதியான அ.சா.1 பூங்கொடி, கிழக்கு புளியம்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி தாலுக்கா, சேலம் மாவட்டம் என்ற முகவரியில் குடியிருந்து வருகிறார். அவரது மூத்த மகன் எதிரி பிரசாந்த் என்பவருக்கு திருமணம் செய்து வைக்க ரூ.5 லட்சம் கடன் வாங்கியுள்ளார். அதை கட்ட முடியாததால் கடன்காரர்கள் வந்து பணத்தை கட்டசொல்லி கேட்டதால் அ.சா.1 – பூங்கொடி வீட்டில் அவர் போட்டிருந்த தறியை விற்று பணத்தை கட்ட ஏற்பாடு செய்தபோது, எதிரி திரு.பிரசாந்த் தறியை விற்க கூடாது என்று சொல்லி தடுத்து வந்துள்ளார். இந்நிலையில் 12.04.2025–ம் தேதி மாலை 7.00 மணிக்கு அ.சா.1 அவரது வீட்டின் முன்னால் இருந்தபோது, பிரசாந்த் வீட்டின் முன்னால் இருந்த பொருட்களை தூக்கி வீசி, பணம் கொடுக்கவில்லை என்றால் உன்னை கொன்று விடுவேன் என்று சொல்லி கொலை மிரட்டல் விடுத்தது சட்டப்பிரிவு 351(3) B.N.S.–ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் ஆகும்.

**1.(a).** மேற்சொன்ன அதே சமயத்தில், அ.சா.1 பணம் கொடுக்காததால் எதிரி பிரசாந்த் கத்தியை காட்டி மரியாதையா வச்சியிருக்கிற பணத்தை எடுத்து கொடுத்துவிட்டு இல்லையின்னா கொன்று



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:34:19 +0530

விடுவேன் என்று சொல்லி அ.சா.1–க்கு மரண பயத்தை ஏற்படுத்தி மிரட்டியது சட்டப்பிரிவு 308 (5) B.N.S.–வின் படியும், தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்ததாக மகுடஞ்சாவடி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் இந்நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** மேற்படி குற்ற அறிக்கையை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 351(3), 308 (5) B.N.S–ன் கீழ் புலன் கொள்ளக்கூடிய முகாந்திரம் இருந்ததால் இவ்வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் பிரிவு 230 B.N.S.S–வின் கீழ் இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கி எதிரியிடம் குற்றங்கள் பற்றி விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றங்களை மறுத்துரைத்தார். எதிரி மீதான முதற்நோக்கிலான குற்றங்களுக்கு போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 351(3), 308(5) B.N.S.–ன் கீழ் குற்றச்சாட்டுகளை வனைந்து, அவரிடம் விளக்கி கூறி வினவியபோது, எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கு விசாரிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். எனவே, அரசுதரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**3.** அரசுத்தரப்பில், பட்டியல் சாட்சிகள் 2 முதல் 6 வரையிலான சாட்சிகளை இவ்வழக்கில், விசாரிக்க வேண்டியதில்லை என்று



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:34:25 +0530

கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார். இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த **பட்டியல் சாட்சி 6 – திரு.ரவுத்திரி வெங்கடேஷ், காவல் உதவி ஆய்வாளர்** அவர்கள் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் அவருக்கு பதிலாக **திரு. மயில்கணேசன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,** அவர்களை அரசுதரப்பு பட்டியலில் கூடுதல் சாட்சியாக சேர்ப்பதற்காக பிரிவு 348 of B.N.S.S–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு இந்நீதிமன்றத்தால் ஒப்புதல் பெற்ற பின்னர், அரசுத்தரப்பு சாட்சி 2–ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அத்துடன் அரசுத்தரப்பு சாட்சி விசாரணையானது முடிக்கப்பட்டது

**4.** அரசுதரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5.** அரசுதரப்பு சாட்சியங்கள் விசாரித்து முடித்த பின்பு, அதனைப் படித்து காண்பித்து பிரிவு 351(1)(b) B.N.S.S–ன் படி கேள்விகள் கேட்டபோது, எதிரிகள் அதனை பொய்சாட்சியம் என்றும், பொய்வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

**6.** எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ விசாரணை செய்து குறியீடு செய்யப்படவில்லை.



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:34:31 +0530

**7.** அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் ஆகியவற்றின் மூலமாக, அரசுதரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டு உள்ளதாகவும், எனவே, எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று அரசுதரப்பில் வாதிடப்பட்டது.

Chart for Witnesses Examined:

| Prosecution Witness No. | Name of Witness | Description |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. பூங்கொடி | புகார்தாரர். இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சி மற்றும் குற்ற சம்பவத்தை பற்றி கூறும் சாட்சி |
| அ.சா.2 | திரு. மயில்கணேசன், **சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்** | இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திரு. ரவுத்திரி வெங்கடேஷ், இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த விவரத்தைப் பற்றிக்கூறும் சாட்சி. |

Chart for Exhibited Documents:

| Exhibit No. | Description of the Exhibit | Proved by / Attested by |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார்வாக்குமூலத்தில் உள்ள | அ.சா.1 |



SIVAKUMAR D Digitally signed by SIVAKUMAR D Date: 2026.08.10 16:34:37 +0530

| | | |
|---|---|---|
| | அ.சா.1–ன் கையொப்பம் | |
| அ.சா.ஆ.2 | சமாதான மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.3 | புகார் வாக்குமூலம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| அ.சா.ஆ.5 | பார்வை மகஜர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.6 | மாதிரி வரைபடம் | அ.சா.2 |

**8. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் எதிரி தான் இவ்வழக்கு குற்ற சம்பவ சமயத்தில் ஈடுபட்டார் என்ற விவரத்தை அரசுதரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்று வாதிட்டார்.**

**9.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசுதரப்பில், எதிரி மீது வனையப்பட்டுள்ள பிரிவுகள் 351(3), 308(5) B.N.S.–ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள், தங்களின் முதல் விசாரணையின் போது, கீழ்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளனர்:</u>**

**10. (a). அ.சா.1. திருமதி. பூங்கொடி,** தனது முதல் விசாரணையில், "1. நான் சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இடங்கணசாலை கிராமம் கிழக்கு புளியம்பட்டியில் குடியிருந்து தறி தொழில் செய்து



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:34:43 +0530

வருகிறேன். ஆஜர் எதிரி எனக்கு தெரியும், எதிரி எனது மகன் ஆவார். எனக்கும் எனது மகனுக்கும் அடிக்கடி பிரச்சனை ஏற்படுவது வாடிக்கையாகும். கடந்த 12.04.2025 ம் தேதி மாலை 07.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது எனது மகன் என்னிடம் வழக்கம் போல் என்னிடம் தகராறு செய்தார். அவர் மீது இருந்த கோபத்தில் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். புகாரில் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10. (b). திரு. மயில்கணேசன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்** "1) நான் தற்போது மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி காவல் நிலையத்தில் பணி புரிந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.ரௌத்திரி வெங்கடேஷ் பணி மாறுதலில் சென்றுவிட்டதால், அவர்களுடைய கையொப்பம் எனக்கு பரிட்சையம் என்பதாலும், வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 13.04.2025 ம் தேதி காலை 10.15 மணிக்கு காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.ரௌத்திரி வெங்கடேஷ் நிலைய அலுவலில் இருந்த போது, இடங்கணசாலை கிராமம்,



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:34:49 +0530

புளியம்பட்டியை சேர்ந்த பூங்கொடி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்ததில் குற்ற எண். 127/2025 ஆக சட்டபிரிவுகள் 351(3), 308(5) BNS ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். பின்னர் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.2, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். **(மேற்சொன்ன புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

3) பின்னர் அன்றைய தினமே 11.15 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று வெங்கடேசன், பார்த்திபன் ஆகிய சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் ராமு, சந்தோஷ் ஆகியோரைத் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்சொன்ன பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4) பின்னர் அன்றைய தினமே 12.30 மணிக்கு வெங்கடேசன், பார்த்திபன் ஆகிய அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளார். எதிரியை கடந்த 13.04.2025ம் தேதி 12.45 மணிக்கு கைது செய்து பிணையில் அடைக்கப்பட்டார். இத்துடன் விசாரணையை முடித்து எதிரி மீது கடந்த 14.04.2025ம்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:34:54 +0530

தேதி, சட்டப்பிரிவுகள் 351(3), 308(5) BNS–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் எதிரி தான் இவ்வழக்கு குற்ற சம்பவ சமயத்தில் ஈடுபட்டார் என்ற விவரத்தை அரசுதரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்று வாதிட்டார்.**

மேற்படி எதிரியின் தரப்பு வாதத்தை இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு ஆய்வு செய்து, தீர்மானிக்கிறது:

**விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்:**

**11. (a).** அ.சா.1, இவ்வழக்கின் புகார்தாரார் என்ற நிலையில், தனது முதல் விசாரணையில், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், எதிரி தனது மகன் என்றும், தனக்கும், தனது மகனான எதிரிக்கும் அடிக்கடி பிரச்சனை ஏற்படுவது வாடிக்கையாகும் என்றும், கடந்த 12.04.2025–ம் தேதி மாலை 07.00 மணியளவில் தான், தன் வீட்டில் இருந்தபோது எதிரி தன்னிடம் தகராறு செய்தார் என்றும், அவர் மீது இருந்த கோபத்தில் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும், புகாரில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:35:00 +0530

**11.(b).** அ.சா.1 தனது சாட்சியத்தில், இவ்வழக்கின் எதிரி தன்னை தன் வீட்டில் இருந்த தறியை விற்று கடன் கட்ட முயற்சி செய்த போது எதிரி இடைஞ்சல் செய்த்தாகவோ, பணம் கேட்டு கத்தியை காட்டி மிரட்டியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ, சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வழக்கில் எதிரி பயன்படுத்தியதாக சொல்லப்படும் கத்தியை இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவில்லை. எனவே, எதிரி சம்பவ சமயத்தில் அ.சா.1–ஐ மிரட்டி பணம் பறிக்க கத்தியை பயன்படுத்தினாரா என்ற ஐயம் இந்நீதிமன்றத்திற்கு எழுந்துள்ளது.

**11.(c).** அ.சா.1 அளித்துள்ள புகார்வாக்குமூலமான அ.சா.ஆ.3–இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்ற விவரங்களுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், அ.சா.1, இவ்வழக்கின் எதிரி தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்று எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டாத நிலையிலும், அ.சா.1, அளித்துள்ள சாட்சியம் அ.சா.ஆ.3– புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களுடன் பொருந்தவில்லை (not corroborated). எனவே, சம்பவ சமயத்தில் இவ்வழக்கின் எதிரி தான் வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்ற விவரத்தை அ.சா.1 இவ்வழக்கில் ஊர்ஜீதப்படுத்தும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11. (d).** இவ்வழக்கின் எதிரி அ.சா.1–ஐ கத்தியை காட்டி பணம் கேட்டு மிரட்டியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ தனது



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:35:05 +0530

சாட்சியத்தில் கூறவில்லை. இவ்வழக்கின் எதிரியை, இவ்வழக்கு குற்ற சம்பவத்துடன் தொடர்புபடுத்தி (Nexus), எந்த அரசுதரப்பு சாட்சிகளும் சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11.(e).** இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து அ.சா.2 அளித்த சாட்சியத்தை மட்டும் வைத்து, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்ற காரணத்தினால், இவ்வழக்கை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11.(f).** எனவே, அரசுதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை இந்நீதிமன்றம் பகுப்பாய்வு செய்த வகைக்கு, மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில், இவ்வழக்கில், எதிரிதான் சம்பவ சமயத்தில், இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்ற விபரத்தை அரசுதரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், இவ்வழக்கில், அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 பிறழ்சாட்சியாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12.** முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் தீர்மானித்த படி, எதிரியின் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளான சட்டப்பிரிவுகள் 351(3), 308(5) B.N.S.–ன்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:35:11 +0530

அரசுதரப்பு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்காத காரணத்தினால், எதிரியின் மீது வனையப்பட்ட சட்டப்பிரிவுகள் 351(3), 308(5) B.N.S.–ன் படி அவர் குற்றவாளி அல்ல என்று முடிவு செய்து, மேற்சொன்ன, எதிரியை பிரிவு 271(1)– B.N.S.S.–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**13.** இவ்வழக்கில், வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**14.** இந்த வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தபோது, எதிரி பிணையில் சென்றுள்ளார். இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின் குற்றம் சாட்டப்பட்ட நபர் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரங்கள் ரத்தாக இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10–ம் நாள் திங்கட்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:35:17 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**சங்ககிரி.**

**<u>பின் இணைப்பு</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

| அரசுதரப்பு சாட்சிகளின் வரிசை எண் | அரசுதரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | திருமதி. பூங்கொடி (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. மயில்கணேசன், **சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்** |

**<u>அரசுதரப்பு சான்றாவணங்கள்</u>:**

| அரசுதரப்பு சான்றாவணங்–களின் வரிசை | தேதி | அரசுதரப்பு சான்றாவணங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 13.04.2025 | புகார்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1–ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 22.07.2026 | சமாதான மனு |
| அ.சா.ஆ.3 | 13.04.2025 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.4 | 13.04.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 13.04.2025 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 13.04.2025 | மாதிரி வரைபடம் |

**<u>அரசுதரப்பு சான்றுப்பொருள்கள்:</u>**

<u>–இல்லை–</u>

**<u>எதிரிதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>**

–இல்லை–

**<u>பிற்சேர்க்கை</u>**

1. வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2. வழக்கு விசாரணை காலத்தில் எந்த ஒரு சாட்சியும் மூன்று



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:35:24 +0530

நாட்களுக்கு மேல் விசாரணையின்றி நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்கின் முடிவு அரசுதரப்புக்கு தெரிவிக்கப்பட்டது.

4. வழக்குச்சொத்து தாக்கல் செய்யப்படவில்லை.

5. முடிவில், எதிரிக்கு, பிரிவு 271(1) **B.N.S.S–** ன் படி விடுதலை வழங்கி இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.10 16:35:31 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**சங்ககிரி.**

Judgment uploaded online on 10.08.2026.